Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 04.05.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 04.05.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

புதுச்சேரியில் என். ஆர். காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சட்டமன்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைக்க உள்ளது.

தமிழகத்தில் திரு. விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

மேற்கு வங்கத்தில் 15 ஆண்டுகளாக தொடர்ந்து ஆட்சியிலிருந்த திரிணாமுல் காங்கிரஸ் கட்சி இந்த சட்டமன்ற தேர்தலில் பின்னடைவை சந்தித்துள்ளது.

அசாமில் வெளியான சட்டமன்ற தேர்தலின் முடிவின்படி ஆளும் பிஜேபி அரசு ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டது.

*ராஜ்நாத் சிங் (11)*

உத்தரபிரதேச மாநில் பிரயாக்ராஜில் தொழில்நுட்பக் கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று தொடக்கி வைத்தார். ரக்ஷா திரிவேணி சங்கம் என்னும் தொழில்நுட்பம், தொழில்துறை மற்றும் வீரர்கள் ஒன்றிணையும் இடம் என்னும் பொருளில் இந்த கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியில் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், தனியார் பாதுகாப்பு தொழில்நுட்ப நிறுவனங்கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் மற்றும் நாடு முழுவதிலும் இருந்து ராணுவத்தில் பணியாற்றும் கண்டுபிடிப்பாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். 3 நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியில் 250க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

*புதுச்சேரி -1 (03)*

புதுச்சேரியில் 30 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை தீவிர பாதுகாப்புடன் நடந்து வருகிறது. இது குறித்த கூடுதல் தகவல்கள் ... (வாய்ஸ்)

*புதுச்சேரி -2 வாய்ஸ் (15)*

(வாய்ஸ்)

அகில இந்திய என்.ஆர் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு. ரங்கசாமி தட்டாஞ்சாவடி தொகுதியில் 4 ஆயிரத்து 441 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவரை தொடர்ந்து முத்தியால்பேட்டை தொகுதியில் போட்டியிட்ட திரு. வையாபுரி மணிகண்டன், அரியாங்குப்பம் தொகுதியில் திரு. ஐயப்பன், ஏம்பலம் தொகுதியில் திரு. மோகன்தாஸ், வில்லியனூர் தொகுதியில் போட்டியிட்ட திரு. ரவிகுமார், லாஸ்பேட்டை தொகுதியில் போட்டியிட்ட திரு. வி.பி. சிவக்கொழுந்து நெட்டப்பாக்கம் தொகுதியில் போட்டியிட்ட திரு. ராஜவேலு, காரைக்கால் வடக்கு தொகுதியில் போட்டியிட்ட திரு. பி.ஆர்.என். திருமுருகன், ஏனாம் தொகுதியில் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மங்கலம் தொகுதியில் போட்டியிட்ட திரு.ரங்கசாமி 1,249 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளனர்.

*புதுச்சேரி -2 (19)*

பாரதீய ஜனதா கட்சி சார்பில், மண்ணாடிப்பட்டு தொகுதியில் போட்டியிட்ட திரு. நமசிவாயம் மற்றும், நிரவி டி.ஆர். பட்டினம் தொகுதியில் போட்டியிட்ட திரு. மீனாட்சி சுந்தரம் ஆகியோர் வெற்றி

பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முதலியார்பேட்டை தொகுதியில் போட்டியிட்ட திரு. ஜான் குமார் 465 வாக்குகள் வித்தியாசத்திலும் முன்னிலையிலும் உள்ளனர். நெல்லித்தோப்பு தொகுதியில் போட்டியிட்ட திமுக வேட்பாளர் திரு.கார்த்திகேயன் 850 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ராஜ்பவன் தொகுதியில் போட்டியிட்ட திமுக வேட்பாளர் திரு. விக்னேஷ் கண்ணன் 287 வாக்குகள் வித்தியாசத்திலும், காலாப்பட்டு தொகுதியில் போட்டியிட்ட திரு. செந்தில் என்கிற ரமேஷ் 226 வாக்குகள் வித்தியாசத்திலும், பாகூர் தொகுதியில் போட்டியிட்ட திரு.செந்தில் குமார் 1556 வாக்குகள் வித்தியாசத்திலும், காரைக்கால் தெற்கு தொகுதியில் போட்டியிட்ட திரு. நாஜிம் 132 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளனர். ஊசுடு தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் திரு.கார்த்திகேயன் 4,018 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளார். காமராஜ் நகர் தொகுதியில் போட்டியிட்ட லட்சிய ஜனநாயக கட்சியைச் சேர்ந்த திரு. ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் 10,205 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி -3 (07)*

மணவெளி தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட திரு. ராமு 3,093 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். மேலும்,

அஇஅதிமுக சார்பில் போட்டியிட்ட திரு. அன்பழகன் 1,026 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளார். நேயம் மக்கள் கழகத்தின் சார்பில் உருளையன் பேட்டையில் போட்டியிட்ட திரு. நேரு என்கிற குப்புசாமி 1,201 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

*சந்திரபாபு (16)*

வெளியாகியுள்ள சட்டமன்ற தேர்தலின் முடிவுகள் பிரதமர் திரு.நரேந்திர மோடியின் தலைமையின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை காட்டுவதாக ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார். வளர்ந்த இந்தியா என்னும் தொலைநோக்குப் பார்வையைக் கொண்ட தேசிய ஜனநாயக கூட்டணியின் மீது மக்கள் வைத்துள்ள அபிமானத்தை பிரதிபலிப்பதாகவும், அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம், அனைவரின் நம்பிக்கையைப் பெறுவோம் என்னும் கொள்கையை பின்பற்றுவதாகவும், இந்த தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளதாக திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார். இளம் வாக்காளர்கள் வளர்ச்சி, நம்பகத்தன்மை மற்றும் வலுவான அரசு அமைய வேண்டும் என்பதை இந்த வெற்றியின் மூலம் வலியுறுத்தியுள்ளதாகவும் திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார். இந்த மாபெரும் வெற்றிக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா,

பிஜேபி தேசிய தலைவர் திரு நிதின் நபின், தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்கள், கட்சித் தொண்டர்கள் மற்றும் வாக்காளர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

இடைத்தேர்தல் *(12)*

5 மாநில சட்டப்பேரவை தேர்தலோடு, கர்நாடக மாநிலத்தின் Bagalkot, Davanagere தெற்கு. நாகாலாந்து மாநிலத்தின் Koridang, திரிபுராவின் Dharmanagar, குஜராத் மாநிலத்தின் Umreth, மற்றும் மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள Rahuri , Baramati ஆகிய 7 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன. இதில் பிஜேபி 4 தொகுதிகளிலும், காங்கிரஸ் 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மகாராஷ்டிராவின் பாரமதி தொகுதியில் போட்டியிட்ட அம்மாநிலத்தின் துணை முதலமைச்சரும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் வேட்பாளருமான திருமதி சுனேத்ரா அஜித் பவார் 1 லட்சத்து 21 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

*தமிழகம் -1 (20)*

தமிழக வெற்றி கழகம், தமிழக சட்டமன்றத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து வரலாறு படைக்கத் தயாராக உள்ளது. மாநிலம்

முழுவதும் உள்ள 234 தொகுதிகளில், TVK 105 இடங்களில் முன்னிலை வகிக்கிறது, மேலும் மூன்று இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

இது குறித்த கூடுதல் தகவல்கள் ... (வாய்ஸ்)

*தமிழகம் -2 வாய்ஸ் (17)*

(வாய்ஸ்)

மாநிலத்தில் நிலவும் கடுமையான மும்முனைப் போட்டியில், ஐந்து தொகுதிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள 229 தொகுதிகளின் நிலவரங்கள் தெரியவந்துள்ளன. தேர்தல் ஆணையத்தின்படி, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தலைமையிலான ஆளும் திராவிட முன்னேற்ற கழகம் 53 இடங்களில் முன்னிலை வகிக்கிறது, மேலும் ஐந்து தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. அதே நேரத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் 45 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. பாமக நான்கு இடங்களில் முன்னிலை வகிக்கிறது. இந்திய தேசிய காங்கிரஸ் நான்கு இடங்களில் முன்னிலை வகிக்கிறது, மேலும் ஒரு தொகுதியில் வெற்றி பெற்றுள்ளது. பிஜேபி 2 இடங்களிலும், மற்ற கட்சிகள் ஒன்பது இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன. முக்கிய வேட்பாளர்களில், சென்னையில் உள்ள தனது சொந்தத் தொகுதியான கொளத்தூர் தொகுதியில் போட்டியிடும் தற்போதைய முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், 22 சுற்று வாக்கு

எண்ணிக்கைக்குப் பிறகு, தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் திரு. வி.எஸ். பாபுவை விட சுமார் 8,795 வாக்குகள் வித்தியாசத்தில் பின்தங்கியுள்ளார்.

*தமிழகம் -3 (19)*

சென்னையில் உள்ள சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில், துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், 11 சுற்று வாக்குப்பதிவுக்குப் பிறகு, தவெகவைச் சேர்ந்த திரு. செல்வத்திற்கு எதிராக சுமார் நான்காயிரத்து முந்நூறு வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார். பத்துக்கட்ட வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு, பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளிலும் தவெக தலைவர் திரு. விஜய் கணிசமான முன்னிலையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். இது சட்டமன்றத் தேர்தலில் கட்சியின் சிறப்பான அறிமுகத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. திருச்சி கிழக்கில், விஜய் தனது திமுக வேட்பாளரான திரு. இனிகோ இருதயராஜை விட 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார். பெரம்பூர் தொகுதியில், திமுக வேட்பாளரான திரு. சேகரை விட தவெக தலைவர் சுமார் 23 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அவிநாசி தொகுதியில் போட்டியிடும் பிஜேபி வேட்பாளரும் மத்திய இணை அமைச்சருமான டாக்டர் எல்.முருகன், தவெக-வின் திருமதி கமலியை விட சுமார் ஏழாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில்

பின்தங்கியுள்ளார். சமீபத்தில் திமுகவில் இணைந்த முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம், போடிநாயக்கனூர் தொகுதியில் 2500 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

*மேற்கு வங்கம் (18)*

மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் பாஜக வெற்றியை நோக்கிச் செல்கிறது. மொத்தமுள்ள 294 சட்டமன்றத் தொகுதிகளில், 293 தொகுதிகளுக்கு வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது. அனைத்து 293 தொகுதிகளுக்குமான நிலவரங்கள் தற்போது கிடைத்துள்ளன. பாஜக நான்கு இடங்களைக் கைப்பற்றி 194 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. அதேசமயம், திரிணாமூல் காங்கிரஸ் இதுவரை ஒரு இடத்தைக் கைப்பற்றி 88 இடங்களிலும், சிபிஎம் ஒரு இடத்திலும், மற்ற கட்சிகள் 4 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன. சிறப்புத் தீவிர திருத்தத்திற்குப் பிறகு நடைபெறும் முதல் தேர்தலில், 15 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த திரிணாமூல் காங்கிரஸ் தோல்வியை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்கு வங்க முதலமைச்சரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி, பவானிபூர் தொகுதியில் தனது பாஜக போட்டியாளர் சுவேந்து அதிகாரியை விட முன்னிலை வகிக்கிறார், அதே நேரத்தில் நந்திகிராம் தொகுதியில் சுவேந்து அதிகாரி முன்னிலை வகிக்கிறார். தற்போதைய பிஜேபி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. அக்னிமித்ரா பால்,

அசன்சோல் தக்ஷின் தொகுதியில் திரிணாமுல் காங்கிரஸின் தபஸ் பானர்ஜியை விட முன்னிலை வகிக்கிறார். தெற்கு கொல்கத்தாவில் உள்ள, இடதுசாரிகளின் கோட்டையாக இருந்த ஜாதவ்பூர் தொகுதியில்,

*மேற்கு வங்கம் (16)*

பிஜேபி வேட்பாளர் திரு. சர்பாரி முகர்ஜி திரிணாமுல் காங்கிரஸ் போட்டியாளரை விட முன்னிலை வகிக்கிறார். ஆர்.ஜி. கர் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை வழக்கில் பாதிக்கப்பட்ட மருத்துவரின் தாயாரான பாஜக வேட்பாளர் ரத்னா தேப்நாத், பனிஹாட்டி தொகுதியில் முன்னிலை வகிக்கிறார். ஆம் ஜனதா உன்னயன் கட்சி தலைவர் ஹுமாயூன் கபீர், நௌடா தொகுதியில் முன்னிலை வகிக்கிறார். மேற்கு வங்கத்தில் அடுத்த அரசை பாஜகவே அமைக்கும் என்று பாஜக வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சுவேந்து அதிகாரி திட்டவட்டமாகத் தெரிவித்தார். திரிணாமுல் காங்கிரஸ் தொடர்ந்து நான்காவது முறையாக ஆட்சியைத் தக்கவைக்க இலக்கு வைத்துள்ள நிலையில், பாஜக மாநிலத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. வாக்கு எண்ணிக்கைக்காக மத்திய ஆயுதக் காவல் படையைச் சேர்ந்த 2.5 லட்சத்திற்கும் மேற்பட்ட வீரர்களும், மாநில காவல்துறையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

*அஸாம் - 1(05)*

அசாமில் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிஜேபி ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளும் நிலையில் உள்ளது. மொத்தம் உள்ள 126 சட்டமன்றத் தொகுதிகளில், 39 தொகுதிகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இது குறித்த கூடுதல் தகவல்கள் … (வாய்ஸ்)

*அஸாம் – வாய்ஸ் (17)*

(வாய்ஸ்)

அசாமில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் பிஜேபி 31 இடங்களையும், அதன் கூட்டணிக் கட்சியான அசாம் கண பரிஷத் 2 இடங்களையும், போடோலாந்து மக்கள் முன்னணி 5 இடங்களையும் கைப்பற்றியுள்ளன. மறுபுறம், அகில இந்திய ஐக்கிய ஜனநாயக முன்னணி ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. மீதமுள்ள 87 தொகுதிகளுக்கான நிலவரங்களின்படி, பிஜேபி 60 இடங்களிலும், அதன் கூட்டணிக் கட்சியான அசாம் கண பரிஷத் 8 இடங்களிலும், போடோலாந்து மக்கள் முன்னணி 9 இடங்களிலும், காங்கிரஸ் 19 இடங்களிலும், AIUDF 1 இடத்திலும், ராய்ஜோர் தல் இரண்டு இடங்களிலும், மற்றவை 2 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன. 126 உறுப்பினர்களைக் கொண்ட அசாம் சட்டமன்றத்தில் பெரும்பான்மைக்குத் தேவையான

இடங்களின் எண்ணிக்கை 64 ஆகும். ஜலுக்பாரி தொகுதியில், BJP வேட்பாளரும் முதலமைச்சருமான திரு.ஹிமந்தா பிஸ்வா சர்மா, காங்கிரஸ் வேட்பாளரான திருமதி. பிதிஷா நியோக்கை விட முன்னிலை வகிக்கிறார். ஜோர்ஹாட் தொகுதியில் பாஜக வேட்பாளர் திரு. ஹிதேந்திர நாத் கோஸ்வாமி, அசாம் காங்கிரஸ் தலைவர் திரு. கௌரவ் கோகோயை தோற்கடித்துள்ளார்.

*அஸாம் -2 (07)*

ஜாகிரோடு தொகுதியில் பிஜேபி அமைச்சர் திரு. பிஜூஷ் ஹசாரிகா, காங்கிரஸின் திரு. ஸ்ரீ புபுல் தாஸை விட முன்னிலை வகிக்கிறார். மாநிலத்தில் உள்ள 126 தொகுதிகளுக்குமான வாக்குப்பதிவு ஏப்ரல் 9 ஆம் தேதி நடைபெற்றது. இதில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகபட்சமாக 85.96 சதவீத வாக்குப்பதிவு பதிவானது. ஆளும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முக்கிய அங்கங்களாக அசோம் கண பரிஷத் மற்றும் போடோ மக்கள் முன்னணி ஆகியவை உள்ளன.

*கிரண் ரிஜிஜூ (09)*

புது தில்லியில் புதிதாகத் திறக்கப்பட்ட 'அருணாச்சல நிவாஸ்' அருணாச்சலப் பிரதேச மக்களுக்கு வழங்கப்படும் ஆதரவை வலுப்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகத் திகழ்வதாகச் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ இன்று

தெரிவித்தார். இந்த அருணாச்சல நிவாஸை, அருணாச்சலப் பிரதேச முதலமைச்சர் பேமா காண்டு திறந்து வைத்தார். இது 'வீட்டிற்கு வெளியே ஒரு வீடு' போலச் செயல்படும் என்றும், நாட்டின் தலைநகருடனான பிணைப்பை வலுப்படுத்தும் என்றும் திரு. ரிஜிஜு தனது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*ஈரான் எச்சரிக்கை (13)*

ஹோர்முஸ் நீரிணைக்குள் நுழைவதற்கு எதிராக அமெரிக்காவை ஈரான் எச்சரித்துள்ளதுடன், அப்பகுதிக்குள் நுழைய மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் பலவந்தமாக எதிர்கொள்ளப்படும் என்றும் கூறியுள்ளது. இந்த முக்கிய கப்பல் போக்குவரத்துப் பாதையை அணுகும் எந்தவொரு வெளிநாட்டு ஆயுதப் படைகளும், குறிப்பாக அமெரிக்கப் படைகள் குறிவைக்கப்படும் என்று கூறியுள்ளது. ஹார்மூஸ் நீரிணையின் பாதுகாப்பு ஈரானின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது என்றும், கப்பல்களின் பாதுகாப்பான பயணத்திற்காக தனது இராணுவத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்றும் ஈரானிய இராணுவம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இந்த நீர்வழியில் சிக்கியுள்ளதாகக் கூறப்படும் கப்பல்களுக்கு உதவுவதற்காக, இன்று முதல் தனது நடவடிக்கைகளைத் தொடங்குவதாக அமெரிக்கா அறிவித்ததைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

*இலங்கை- மாலத்தீவு (11)*

இலங்கைக்கும், மாலத்தீவுக்கும் இடையே கல்வி, சுகாதாரம், விளையாட்டு, இளைஞர் மேம்பாடு உள்ளிட்ட 7 துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகியுள்ளன. இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள, மாலத்தீவு அதிபர் முகமது முய்ஸ், இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயகாவுடன் இன்று நடத்திய பேச்சுவார்த்தையின்போது இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. முன்னதாக, இலங்கை தலைநகர் கொழும்புவில், மாலத்தீவு அதிபருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேம்படுத்தும் வகையில், மாலத்தீவு அதிபர் திரு. முகமது முய்ஸ் இந்த பயணத்தை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

புதுச்சேரியில் என். ஆர். காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சட்டமன்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைக்க உள்ளது.

தமிழகத்தில் திரு. விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

மேற்கு வங்கத்தில் 15 ஆண்டுகளாக தொடர்ந்து ஆட்சியிலிருந்த திரிணாமுல் காங்கிரஸ் கட்சி இந்த சட்டமன்ற தேர்தலில் பின்னடைவை சந்தித்துள்ளது.

அசாமில் வெளியான சட்டமன்ற தேர்தலின் முடிவின்படி ஆளும் பிஜேபி அரசு ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது MS/SM/VM**